# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

(1998, யூன் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1998, யூன் மாதம் 26 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.00 தபாற் செலவு : ரூபா 2.50

# 1998 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ 35/97

## குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக .—

1. இச்சட்டமானது, 1998 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 524 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— (101 ஆம் அத்தியாயத்தின்) 524 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் :—

"(ஆஆ) மனுதாரர்களின் அறிவுக்கு எட்டியவரை மரணமெய்தியவரின் மரபுரிமையாளர்கள் ; " ; அத்துடன்

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலம்.

3. முன்மைச் சட்டவாக்கத்தின் 757 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 757 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் :—

"(2) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதிவகத்தில் மேன்முறையீடு செய்வதற்கான அனுமதிகோரும் விண்ணப்பம் கோப்பிலிடப்பட்டதன்மேல், பதிவாளர் அத்தகைய விண்ணப்பத்திற்கு இலக்கமிடுதல்

2-ட 048934-1600 (98/04)

வேண்டுமென்பதுடன், மனு, சத்தியக் கடதாசி மற்றும் பின்னிணைப்புகள் எவையேனும் இருப்பின் அவற்றின் பிரதிகளுடன் சேர்த்து அதனகத்து பெயர் குறிப்பிடப்பட்ட எதிர்வாதிகள் ஒவ்வொருவருக்கும் பதிவுத்தபால் மூலம் அத்தகைய விண்ணப்பம் பற்றிய அறிவித்தலை உடனடியாக அனுப்பி வைத்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டிய தேதியன்று விண்ணப்பத்திற்கு ஆட்சேபனையாக எதிர்வாதி விளக்கம் அளிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படும் என அறிவித்தல் கூறுதல் வேண்டும். மேன்முறைமீடு செய்வதற்கான அனுமதிகோரும் விண்ணப்பம் ஒன்று நிறுத்தி வைத்தற்கட்டளை, இடைக்காலத் தடைக்கட்டளை அல்லது வேறு நிவாரணத்திற்கான வேண்டுதல் ஒன்றையும் உள்ளடக்கலாம்." ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலம் ;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் :—

"(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது நீதிமன்றம் நிர்ணயிக்கவேண்டியவாறான அத்தகைய வேறு தேதியன்று நீதிமன்றமானது மேன்முறையீட்டுக்கான அனுமதிகோரும் விண்ணப்பத்தை விசாரித்தல் வேண்டும் என்பதுடன் மேன்முறையீட்டுக்கான அனுமதியை வழங்குதல் அல்லது வழங்க மறுத்தல் வேண்டும் :

ஆயின் அத்தகைய விண்ணப்பத்தை விசாரித்து முடிவு செய்வதைப் பொறுத்து அத்துடன் மேன்முறையீட்டுக்கான அனுமதி வழங்கப்பட்ட பட்சத்தில் மேன்முறையீட்டை விசாரித்து முடிவு செய்வதைப் பொறுத்து நீதிமன்றம் சந்தர்ப்ப சூழ்நிலைகளில் தோதானதென அது கருதுகின்றவாறான அத்தகைய இடைக்கால நிவாரணத்தை வழங்கும் கட்டளையொன்றை ஆக்கலாம் .".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.